உத்தரவிடப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்து வெடிபொருள் தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்சாலையில் அமைந்துள்ள கிட்டங்கிகளைப் பார்வையிட்டு, வெடிபொருள் உரிம நிபந்தனைகளின்படி தீத்தடுப்பு மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் முறையாக நிறுவப்பட்டுள்ளனவா என்பதையும் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சிவகாசி விபத்தில் இறந்தவர்கள் அனைவரும் வறிய நிலையில் உள்ளவர்கள் என்றும், கூலி வேலை செய்து பிழைப்பவர்கள் என்றும், அவர்களில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதமும், படுகாயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.*50,000* வீதமும், *30* சதவீதம் தீக்காயம் அடைந்த இரண்டு பேருக்கு தலா *25,000* ரூபாய் வீதமும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர் அறிக்கை அனுப்பியுள்ளார். அதனை ஏற்று, அவ்வாறே அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்து, இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை என் சார்பிலும், இந்த அவையோர் சார்பிலும் தெரிவித்து அமைகிறேன்.

5. தகவல் கோரல்

(அ) மேட்டூர் தொகுதி, தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி பட்டாசுத் தொழிற்சாலையில் உயிரிழந்தவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி வழங்கியிருக்கிறார்கள். அதைப்போல, இந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது, ஏற்பட்ட பல இழப்புகளுக்கெல்லாம் நிதி வழங்கியிருக்கின்றார்கள். எங்களுடைய சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியிலேகூட, நான்கு நாட்களுக்கு முன், எரிவாயு உருளை, கேஸ் சிலிண்டர் வெடித்து தீ விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தார்கள். நிதியுதவி கோரி மனுகூடக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டு, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

2009 ஜூலை 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களுடைய இந்த முறையீடு உரிய நேரத்தில் கவனிக்கப்பட்டு, உடனடியாக அவருக்கு அறிவிக்கப்படும்.

(ஆ) திருப்பூர் சாயக் கழிவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

திரு. விடியல் எஸ். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27–1–2007 அன்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதே அவையிலே திருப்பூர் சாயக்கழிவுப் பிரச்சினைக்கு 700 கோடி ரூபாயில் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். அறிவித்து, இரண்டரை ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. அதற்கென்று பால்கிருஷ்ணன் கமிட்டி என்று ஒரு கமிட்டியைப் போட்டார்கள். அந்தக் குழுவின் அறிக்கை அரசுக்கு வரப்பெற்றுள்ளதா? திருப்பூர் சாயக்கழிவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இதுகுறித்து மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்திலே பேசுகிறபோது, மத்திய அரசினுடைய உதவியோடு திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன என்கின்ற செய்தியைப் பதிவு செய்தார்கள். அது குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விழைகிறேன். இது சாதாரண பிரச்சினை அல்ல; 25 இலட்சம் தொழிலாளர்களுடைய பிரச்சினை; பல இலட்சம் விவசாயிகளுடைய பிரச்சினை. இதற்குக் கண்டிப்பாக ஒரு நிரந்தரத் தீர்வை மத்திய அரசு உதவியோடு ஏற்படுத்தித் தந்து, மேற்கு மாவட்ட மக்களைக் காத்து, ஜவுளித் தொழிலையும், விவசாயத்தையும் காப்பதற்கு ஒரு நல்ல அறிவிப்பை இன்றைக்கு வெளியிட்டு, கொங்கு மண்டலத்தை வாழ வைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.